வெளியீடு எண். 586.

உ

சிவமயம்

168.

# தில்லைவனம்

923:38.211௶.
N67.
59851

...மயாதீனம்

1967

1/4
~~815~~
367

உ

குருபாதம்

# திருவடிக் காணிக்கை

கயிலை கண்டருளிய
தருமைக் குருமணி
பயிலருள் தில்லைப்
பதியினிற் போந்து
ஆனந்தக் கூத்தன்
அடியிணை தொழுது
தானமர்ந் தளித்த
தாள்மலர்க் காணிக்கை.

வெளியீடு எண். 886.

உ

சிவமயம்

# தில்லைவனம்

இது

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்

அருளாணைப்படி வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்

17—9—'67

# துணை நூல்கள்

1. சிதம்பரம்
   (தருமையாதீனப் பதிப்பு)
2. கல்வெட்டாராய்ச்சிக் குறிப்புக்கள்
   (தருமையாதீனத்
   திருமுறைப் பதிப்பு)
3. கோயிற் புராணம்
4. சிவபோகசாரம்
5. ஸ்ரீ சிவஞான தேசிகர்
   திருவருட்பாத் திரட்டு
6. தில்லைத் திருமுறைகள்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# நூன்முகம்

---

தில்லையும் தருமையும் தொடர்புடைய திருத்தலங்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர், தருமையை நிறுவியருளிய அருளாளர். அப்பெருமான் அம்பலத்தாடும் ஐயன் அருளையும், அன்னை சிவகாமியம்பிகையின் அருளையும் ஒருசேரப் பெற்ற உயர் பெருங்குரவர். அவர்கள் வழியில் 25ஆவது குருமகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தில்லைக்கு ஆண்டிற் பலமுறையும்

போந்து வழிபட்டுத் திருவருளைத் தேக்கும் அருள் திறம் உடையவர்கள். அவர்கள் திருவுள்ளத்தின் விரிவால் அவ்வப்போது பலப்பல நற் செயல்கள் முகிழ்த்துப் பலன் பெருக்குதல் உலகம் அறிந்தது. அவற்றுள் ஒன்றே 'தில்லைவனம்' எனப் பெயரிய இச் சிறு நூல்.

தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது முறையாகத் தருமைக் குருமணி அவர்களையே தலைவராக ஏற்றது. இவ்வருஞ் செயலை எண்ணிப் பாராட்டெடுக்கின்றது, தில்லைவாழ் சமயத் தமிழ் உலகு. அப் பாராட்டு விழாவினை ஏற்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் தில்லைக்கு எழுந்தருளி அம்பலக்கூத்தன் அடிமலர்

களை வழிபடுகின்றனர்கள். இந் நூல் அந் நினைவின் விளக்கம்; திருவடிக் காணிக்கை.

எளியேனுக்கும் இச் சிவ புண்ணியப் பங்கினை வழங்கியருளிய, எங்கள் ஞான குரவர் திருவடிகளை மனமொழிமெய் களாற் பணிகின்றேன்.

" கயிலைக் குருமணிதாள்
கைதொழுதே நெஞ்சின்
மயலை யறுத்
துய்வேம் மகிழ்ந்து."

அடியேன்,

வித்துவான்,

தருமையாதீனம், 17—9—'67. } சோ. சிங்காரவேலன். எம். ஏ.,

உ

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ்
சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச்
செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச்
சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ்
செல்வஞ் செல்வமே.

— சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# தில்லைவனம்

"தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் நெல்லைகளர்
காஞ்சி கழுக்குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்"

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

## உலகெலாம் ஆடல் :

உலகெலாம் இறைவன் ஆடுகின்றான். சிறிய அணுக்கள் முதல் பெரிய மலைகள் வரை எங்கும் அவன் அருளாடலே. நிலவின் தண்மையும், வெயிலின் வெம்மையும், காற்றின் சுகமும், கனலின் சூடும், எல்லாம் அவன் விளையாட்டே.

அவனது அருளாடலே உலகங்கள் எல்லாம். அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்பது ஆன்ருேர் வாக்கு.

அணுவுக்கு அணுவாய் விளங்கும் அவன் பெரியவற்றுக்கெல்லாம் பெரியவனுய் விளங்குகின்ருன்; 'அணோரணீயான் மகதோ மகதீயான்' என்பர் சான்ருேர். அண்டமோரணுவாக மிகப் பெரியவனும், அணுவோரண்டமாக மிகச் சிறியவனும் ஆவன் அவன் என்று இசைக்கின்றது திருவிசைப்பா.

சாட்டையிலாப் பம்பரமாய்ச் சாரும் அகிலாண்டமெலாம் ஆட்டி நிற்கும் பெருமான் அவன்; அவன் ஆடல் ஒருகணம் நின்ருல் உலக இயக்கம் இல்லை; உயிர்களின் வாழ்வு இல்லை. இங்க உண்மையை விளக்கவே, உயிர்கள் தோறும்

அருளாடல் புரியும் அவ்வொப்பற்ற பரம்பொருள் ஞான ஆடலைப் புரிகின்ருன்; அறிவு வெளிக்குள் ஆடும் அப் பரம்பொருள் தில்லை வெளியிலும் ஆடுகின்ருன். ஊன நாடகம், ஞான நாடகம் என்ற அழகிய தொடர்களால் திருவாசகம் தெரிவிக்கும் பேருண்மை இது.

## திருக்குறிப்பு :

தில்லை ஞானத்தின் எல்லை. ஆடல் வல்லானின் அற்புதக் கோலம்; கண்ணுக்கு விருந்தாய் - கருத்துக்குத் தேனுய் இங்கே காட்சி தருகின்ருன் 'கற்பனை கடந்த சோதிப்' பிழம்பு. திருச்சிற்றம்பலத்தே குனித்தாடும் அந்த ஆனந்தக் கூத்து உலகம் ஆட ஆடும் அருட்கூத்து. 'சேரவாரும் செகத்திரே' என்று

அழைத்து, உலகங்கள் அனைத்திற்கும் 'மூலபண்டாரம் வழங்கும்' முதல்வனின் திருவருட்குறிப்பு இத் திருக்கூத்தால் தெளிவுற வேண்டிய உண்மை.

தில்லையில் ஆடும் அத் தொல்லோனைக் கண்ட மணிவாசகர் ஆனந்தக் கூத்தினைத் தாமும் ஆடுகின்றார். 'அந்தம் இலா ஆனந்தம்' என்கின்றார்; சிந்தையைத் தெளிவாக்கி, சிவமாக்கித் தமை ஆண்டது அவ்வானந்தம் என்று அகங்கனிகின்றார். 'இந்திரியங்களின் வழியே சென்று மயங்கி, இறப்பதற்கே காரணமாகி அந்தரமே திரிந்துபோய் அருநரகில் விழ இருந்த' தம்மைத் தடுத்தாட்கொண்டது அந்தப் பேரின்பம் என்று மலர்கின்றார். 'தித்திக்கும் சிவபதத்தை, அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லைக் கண்டேன்' என்று கூறிக் கூறி

மகிழ்கின்றார். ஆனந்தக்கூத்தன் நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும்பும் உள் நெகக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடைய தாண்டவ வேந்தன். அந்த இன்பத்தேனை நுகர்ந்து, திருக்குறிப்பை நுகர்ந்த சான்றோர் அருளமுதம் வீசும் நறுமணம் உலகெலாம் கமழ்ந்து தவழ்கின்றது.

## உபநிடதத் தோன்மை :

தில்லைத் திருத்தலத்தைச் 'சத்' என்றும், 'சபா' என்றும் சாந்தோக்கிய உபநிடதம் கூறும்; கிருஷ்ணயசுர் வேதிய சுவேதாசுவதர உபநிடதம் 'பரம்' என்றும் 'சத்யம்' என்றும் உரைக்கும்; பிருகதாரணியோபநிடதம் 'மகத்' என்று புகழும்; கைவல்யோப

நிடதம், விவிக்தம்' என்றும், 'அற்பு தம்' என்றும் விளம்பும்; சாந்தோக்கிய உபநிடதம் 'புண்டரீகம்' எனப் புகலும்; தைத்திரீயோபநிட தம் 'குகை' 'ஞானு னந்தம்' 'பரமவியோமம்', 'பரமால யம்' என்றெல்லாம் இயம்பும்;

தில்லை : யோகானுபவத்தில் :

ஞானநிலையில் தில்லைவனத்தைப்பற் றிப் பின்வருமாறு பெரியோர் பேசுவர்; விராட்புருடனுகிய உடம்பில் இடை நாடி இடப்பக்கமாகவும், பிங்கலை நாடி வலப்பக்கமாகவும் போகும். அது போன்று இந்தப் பரதகண்டத்தில் இடைநாடி இலங்கைக்கு நேரே போகும்; பிங்கலைநாடி இமயமலைக்கு நேரே போகும். இந்த இரண்டிற்கு நடுவே சுழுமுனைநாடி செல்லும். அச் சுழுமுனை

நாடி தில்லைவனத்திலே சென்று கூடும். அங்கேயே நிலையான அம்பலம் உள்ளது. அங்கு இறைவன் ஆனந்தக் கூத்து ஆடுகின்றான். கோயிற்புராணத்தே உமாபதி சிவாசாரியர் இப் பேருண்மையைப் பின்வரும் பாடல்களில் விளக்குவர் :

'வலங்கைமான் மழுவோன் போற்றும்
வாளர வரசை நோக்கி
அலைத்திடும் பிண்டம் அண்டம்
அவை சமம் ஆதலாலே
இலங்கைநே ரிடைபோம் மற்றை
இலங்கு பிங்கலையா நாடி
நலங்கிளர் இமய நேர்போம்
நடுவுபோஞ் சுழுனை நாடி'
'நாடரு நடுவின் நாடி
நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக்
குறியுளது அதற்குத் தென்னர்

மாடுறு மறைகள் காணு
  மன்னும்அம்பலம் ஒன்றுண்டுஅங்கு
ஆடுதும் என்றும் என்ருன்
  என்னை யாளுடைய வையன்'

(பதஞ்சலிச் சருக்கம் 70, 71)

" அம்பலமாவது அகிலசராசரம்
அம்பலமாவது ஆதிப்பிரானடி
அம்பலமாவது அப்புத்தீமண்டலம்
அம்பலமாவது அஞ்செழுத்தாமே "

" இடை பிங்கலையிம
  வானேடி லங்கை
நடுநின்ற மேரு
  நடுவாம் சுழுனை
கடவும் தி(ல்)லைவனம்
  கைகண்ட மூலம்
படர்வொன்றி யென்னும்
  பரமாம் பரமே "

"பூதல மேருப்
புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங்
கலையொண் சுழுனையாம்
பாதி மதியோன்
பயில் திருவம்பலம்
ஏதமில் பூதாண்டத்
தெல்லை யிலீறே"

என்னுந் திருமூலர் திருவாக்குக்களும், தில்லைவனத்தின் இவ்வுண்மை நிலையினைத் தெளிவாக்குகின்றன.

## இதயத்தலம்:

உலகம் ஒரு புருஷ வடிவம் என்பர். அதற்கு மூலாதாரத் தானம் திருவாரூர். மணிபூரகமாக விளங்குவது திருவண்ணாமலை; இருதயமே சிதம்பரம், கண்

டமே காளத்தி, புருவமத்திமமே காசி; என்றுரைப்பர். எனவே உலகபுருஷ னின் இதயமாக சிதம்பரம் விளங்குதல் அறியலாம்; இந்த இதயத்திலே துடிப் பாக — ஆடலாக — நடராசப்பெருமா னின் அருளாடல் இல்லையென்றால் உலகமே இல்லை என்று கூறுவது இக் கருத்தாலேயே.

## முத்தித்தலம் :

தில்லை முத்தித் தலங்களுள் முதலாவ தாக விளங்குகின்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளிய திருப்பாட்டினால் இவ்வுண்மை புலனாகின்றது. 'தில்லை வனம்' எனத் தொடங்கும் அத்திருப் பாட்டில் இக்கோயில் என்னும் சிதம் பரமே தரிசிக்க முத்தி தருவதாக முதற்

கண் வைத்து மொழியப்பட்டிருக்கின்றது.

## வழிபட்டோர் மாண்பு :

சைவ சமயத்தில், உயிர்த்தலமாக விளங்கும் இத்தில்லைவனமே 'கோயில்' என்ற பெயருடன் விளங்கும் தலம். பஞ்சபூதத் தலங்களுள் இஃது ஆகாயத் தலம் என்று கூறப்படும். இத்தலத்தே வழிபட்டு உய்ந்தவர் மிகப்பல அருளாளராவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய சமய குரவர் நால்வர். மெய்கண்டார், அருணந்தி சிவம், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய சந்தானகுரவர் நால்வர். வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்யு முனிவர், தில்லைவாழந்தணர்கள், வியாச முனிவர், சுக முனிவர்,

சௌனக முனிவர். சைமினி முனிவர், சூத முனிவர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் குமரகுருபரர் முதலிய பலர்.

## இலக்கியச் சிறப்பு :

சிதம்பரத்தைப் பற்றிய பிரபந்தங்கள், புராணங்கள், சாத்திரங்கள் பல. அவற்றுட் சிறப்பாகக் குறிக்கத்தக்கன சில. அவை வருமாறு :

தலபுராணங்கள் : உமாபதிசிவாசாரியர் அருளிய கோயிற் புராணம், புராணத் திருமலைநாதர் அருளிய சிதம்பர புராணம், யாழ்ப்பாணத்துத் தெல்லிப் பழை சிவானந்தையர் இயற்றிய புலியூர்ப் புராணம், சபாபதி நாவலர் இயற்றிய சிதம்பர சபாநாத புராணம்.

பிரபந்தங்கள்: பட்டினத்தார் அருளிய கோயில் நான்மணிமாலை, சேரமான் பெருமாள் நாயனார் அருளிய கோயில் நான்மணிமாலை, நம்பியாண்டார் நம்பிகள் அருளிய கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம், இரட்டையர் பாடிய தில்லைக் கலம்பகம், குமரகுருபரர் அருளிய சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவைகள், குகை நமச்சிவாயர் அருளிய சிதம்பர வெண்பா, சிவஞான தேசிகர் அருளிய நடேசர் திருவருட்பா, சிதம்பரநாத முனிவர் செய்தருளிய நடராச சதகம் முதலிய பல பிரபந்தங்கள் குறிப்பிடத் தக்கவை. திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் அருளிய திருக்களிற்றுப் படியார் என்ற சாத்திர நூல், பஞ்சாக்கரப் படியில் வைக்கப் பெற்றதும், அப்

படியிலுள்ள திருக்களிற்றுக்கைநிமிர்ந்து நடராசப்பிரான் திருவடித் தாமரைகளில் வைத்த அருஞ் சிறப்பு உடையது. இவ்வாறே நடராசப்பிரான் கோயிற் கொடி யேறுதற் பொருட்டு உமாபதி சிவாசாரியர் பாடியருளிய கொடிக்கவி இத்தலத் தெழுந்த சாத்திரம்.

## திருப்பதிகங்கள் :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடியருளிய பதினொரு திருப் பதிகங்கள் தில்லைக்கு உண்டு. மணிவாசகப்பெருமான் 'திருவாசகத்திற்கு வாச்சியம் ஆவார் நடராசப்பிரானே' என்று கூறி அப்பிரானுடன் இரண்டறக் கலந்தருளினர். இவர் இயற்றிய திருவாசகம் திருக்கோவையார் இரண்டையும் திருச்

சிற்றம்பலம் உடைய பிரானே எழுந் தருளி எழுதிக் கைச்சாத்திட்டனன் எனில் வேறு சொல்ல என்ன இருக்கின் றது!

**திருவாசகத்தில் :**

கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல், திருப் பொற் சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப் பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக் கம், திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் பதிகம், கண்டபத்து, அச்சப்பத்து, குலாப்பத்து' எண்ணப்பதிகம், யாத்திரைப்பத்து, திருப்படையெழுச்சி, திருப்படையாட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பத்து - ஆகிய

பலபகுதிகள் திருவாசகத்தில் தில்லையிற் பாடப் பெற்றவையாக அறிவுறுக்கப் பெறுகின்றன. இதனாலேயே 'தில்லை பாதி திருவாசகத்தில்' என்றபழமொழி யும் இந்நாட்டிடைத் தோன்றி வழங்கு கின்றது.

திருக்கோவையாரில் :

திருக்கோவையார் முழுதும் தில்லை வனத்துள் ஆடும் பெருமான் புகழ் பேசப்படுகின்றது. மணிவாசகப் பெரு மானுக்கும் தில்லைக்கும் உள்ள பெருந் தொடர்பு பல அருந்தொடர்களாகத் திருக்கோவையாரில் விளங்குகின்றன.

தில்லைத் தொல்லோன், புலியூர்ப் புனிதன், மாணிக்கக் கூத்தன், நிருத்தம் பயின்றவன், தொழுதெழுவார் வினை

023:32.21193.7
N67



வளம் நீடுறை நீறணி அம்பலவன், எரியாடி, கோற்றேன், சிறைவான் புனற் றில்லைச்சிற்றம்பலத்துள்ளும் என் சிந்தை யுள்ளும் உறைவான், முதலிய பல நறுந் தமிழ்த்தொடர்கள் தில்லைவனம் உறை பெருமானைப் பற்றிய கோவையார் வாக்குக்கள். ஒளிவளர் தில்லை, சேணிற் பொலி செம்பொன் மாளிகைத் தில்லை, அணிதில்லை, தில்லைத் தென்னகர் என றெல்லாம் மணிவுசேர் தில்லையை மனமாரப் புகழ்வர்.

59851

**பிற நூல்களில்:**

திருவிசைப்பாவில், திருமாளிகைத் தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பி காடநம்பி, வேணாட்டடிகள், திருவாலி யமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் ஆகியோரும், சேந்தனாரும் பாடிய

பதினைந்து திருப்பதிகங்கள் தில்லைவனம் பற்றியவை. பொன்வண்ணத்தந்தாதி, கோயில்நான்மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம் ஆகியவை பதினோராம் திருமுறையில் உள்ள சிறு பிரபந்தங்கள்.

சாத்திரநெறியில் :

நடராசப்பெருமானின் திருவுருவத்தை இருபத்தைந்து மாகேசுரர்களில் ஒருவராகிய 'சபாபதி' என்பர் சான்றோர். அன்றியும் அதிகார சிவமாகிய மாகேச்சுர மூர்த்தங்களுக்கும் அப்பாற்பட்ட போகசிவமாகிய 'சதாசிவ மூர்த்தம்' என்று கூறுவர். அதற்கு மேலும், 'சதாசிவ மூர்த்திக்கும் மேம்பட்ட போகசிவத்தின் மேலானது' என்றும் உரைப்பர் சமயச் சான்றோர்.

நடராசப் பெருமான் அருளாடலில் ஐந்தெழுத்து விளங்குகின்றது. திருவடி நகரம், உதரம் மகரம், தோள் சிகரம், முகம் வகரம், முடி யகரம் ஆக ஐந்தெழுத்து அமைப்புக் காணலாம். இதனை 'ஊனநடனம்' என்பர். துடி சிகரம், வீசுகரம் வகரம், அபயகரம் யகரம், அக்கினி நகரம், ஊன்றிய அடிக் கீழ் மகரம் ஆக ஐந்தெழுத்து விளக்கம் 'ஞானநடனம் என்பர். இவற்றை விளக்கும் உண்மை விளக்கத் திருப் பாடல்கள் பின்வருமாறு ;

" ஆடும் படிகேள்நல் அம்பல த்தான் [ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம் - கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்".

"சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா
[வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்.
[பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்குமகரமது தான்".

'ஐந்தொழில் தாண்டவம்'

இறைவனது தாண்டவம் எழுவகையென்றும் ஒன்பது வகையென்றும் நூல்களிற் கூறப்பெற்றுள்ளன. காளிகா தாண்டவம், கௌரி தாண்டவம், சந்தியா தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம் ஆனந்த தாண்டவம் என்பன ஏழுவகைகள். நடராசப்பிரான் ஆடுவது ஆனந்த தாண்டவம். இஃது எழுவகைக்கூத்திற் நம் அப்பாற்பட்டது.

பஞ்சகிருத்திய பரமானந்தத் தாண்டவம் என்று கூறத்தக்கது இது.

சிதம்பர மும்மணிக்கோவையில். குமரகுருபரர் ஐந்தொழில் அருமையை அழகுற விளக்கும் பகுதி பின்வருமாறு;

" பூமலி கற்பகப்
புத்தேள் வைப்பும்
நாமநீர் வரைப்பில்
நானில வளாகமும்
ஏனைப்புவ னமும்
எண்ணிங் குயிரும்
தானே வகுத்ததுன்
தமருகக் கரமே ;
தனித்தனி வகுத்த
சராசரப் பகுதி
அனைத்தையும் காப்பதுன்
அமைத்த பொற்கரமே

தோன்றுபு நின்றவத்
தொல்லுல கடங்கலும்
மாற்றுவது ஆரழல்
வைத்ததோர் கரமே ;
ஈட்டிய வினைப்பயன்
எவற்றையும் மறைத்து
ஊட்டுவதாகும் நின் [நின்று
ஊன்றிய பதமே ;
அடுத்த இன்னுயிர்கட்கு
அளவில் பேரின்பம்
கொடுப்பது முதல்வநின்
குஞ்சித பதமே ''

இதில் நாததத்துவத்தினின்று உலகங்கள் படைக்கப்பெற்ற திருவருட் குறிப்பே 'தமருகம்' அல்லது 'உடுக்கை' யால் புலப்படுத்தப் படுவதென்பது அறியத்தக்கது ஆகும்.

இறைவன் இவ்வாறு ஐந்தொழில் புரியும் அருளிப்பாட்டை ஆனந்தக் கூத்தன் அருளாடலில் கண்டது அருள் உலகு. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களும் அவன் அருளாடலில் விளங்குமாற்றைச் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம். 'துடி' படைத்தல்; அமைக்கும் கரத்தில் காத்தல்; 'அக்கினியிலே' அழித்தல்: ஊன்றிய பாதத்தில் மறைத்தல்; எடுத்த பொற் பாதத்தில் 'அருளல்' இதனைப் 'பஞ்ச கிருத்திய தாண்டவம்' என்று புகழ்ந் துரைப்பர். உண்மைவிளக்கப் பாடல், இவ்வற்புதக் கோலத்தின் அடிநிலைக் கொள்கையைப் பின்வருமாறு விளக்கு தல் இங்கு அறியத்தக்கது;

" தோற்றம் துடியதனில்
தோயும் திதியமைப்பிற்
சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம் — ஊற்றமா
ஊன்றுமலர்ப்பதத்தில் உற்ற
திரோதம் முத்தி
நான்றமலர்ப் பதத்தே
நாடு "

தில்லையில் ஐந்துசபைகள் :

தில்லைக் கோயிலுள்ளேயே ஐந்து சபைகள் உள்ளன. (1) பேரம்பலம்: இது தேவசபை என்று கூறப்படும். தேவாரத்தில் திருஞானசம்பந்தர்,

" நிறைவெண்கொடிமாடம் நெற்றி
நேர் தீண்டப்
பிறைவந் திறை
தாக்கும் பேரம்பலம் "

என்று கூறுவது இதனையே.

(2) சிற்றம்பலம்: இது நடராசப் பெருமான் திருநடம் புரிந்தருளும் இடம்.

" தில்லையுட் சிற்றம்பலத்து
ஆடஎடுத்திட்ட பாதம் "

என்றும்,

" முழுதும் வானுலகத்துள
தேவர்கள்
தொழுதும் போற்றியும்
தூயசெம் பொன்னினால்
எழுதி மேய்ந்த
சிற்றம்பலக் கூத்தனை
இழ்ைதையேன் மறந்து
எங்ஙனம் உய்வனே "

என்றும் அப்பரடிகள் பாடுவர். இதனி னின்றும், சிற்றம்பலத்திற்குப் பொன்

வேய்ந்த காலம் மிகப்பழையது என்பதும், அது தேவர்களால் வேயப்பட்டதென்பதும், புலனாகும். ஆதலின் முதற்பராந்தக சோழன் முதலியோர் காலத்திற்குக்காலம் அவ்வமைப்பினைப் புதுப்பித்து வந்திருக்கின்றனர் என்பதும் விளங்கும்.

(3) கனகசபை: பெருமான் அபிடேகம் கொண்டருளும் இடம் இப்பெயரான் வழங்கப்படும்.

(4) நிருத்தசபை: பெருமான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்தருள்வது.

(5) இராஜசபை: இஃது ஆயிரக்கால் மண்டபம் என்று இப்போது வழங்கப் பெறுவதாகும்.

## கல்வெட்டுக்களும் செய்திகளும் :

இப் பெருங்கோயிலில் இருக்கும் கல் வெட்டுக்கள் மிகப் பல. பிற்காலச் சோழர்களில், முதலாம் இராசராசன், முதலாம்இராசேந்திரன், முதற்குலோத் துங்கன், விக்கிரமன், இரண்டாம் இரா சாதிராசன், மூன்றுங் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன் ஆகியோர் காலத் துக் கல்வெட்டுக்கள் உள்ளன. பாண்டி யர்களில், வீரபாண்டியன், சுந்தரபாண் டியன், குலசேகரதேவன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் காணப்பெறு கின்றன. பல்லவர் காலத்துக் கோப் பெருஞ் சிங்கன் காலத்ததும், விசயநகர பரம்பரையினரில் கிருட்டினதேவ மகா ராயர், வேங்கடதேவ மகாராயர், ஸ்ரீ ரெங்கதேவ மகாராயர், அச்சுததேவ மகாராயர், வீரபூபதிராயர் ஆகியோர்

காலத்தனவும், சேரர்களில் இராமவர்மர் காலத்ததும், சாளுவ பரம்பரையில் வீரப்பிரதாப தம்முராயர் காலத்ததும் ஆகிய கல்வெட்டுக்கள் உள்ளன.

திருச்சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தது, பேரம்பலத்திற்குச் செப்பு வேய்ந்தது, திருச்சிற்றம்பலமாகாளிக்குக் கோயில் இருந்தது, சிங்களாந்தகன் பெயரால் அறச்சாலை அமைத்திருந்தது, சுந்தரபாண்டியன் திருத்தோப்பு, எதிரிலி சோழன் திருத்தோப்பு, வழியடிமை கொண்டான் தோப்பு, குலோத்துங்க சோழன் திருத்தோப்பு ஆகிய பெயர்களில் தோப்புக்கள் இருந்தது, ஆனி, மார்கழி, மாசித் திங்கள்களில் திருவிழாக்கள் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. திருநாவுக்கரசு தென் திருமடம் என்றும், திருஞானசம்பந்தர்

திருக்கோயில் என்றும் சமய குரவர்க் குக் கோயிலும் மடமும் தனித்தனியே அமைந்திருந்தது ஆகிய பல செய்திகள் இக் கல்வெட்டுக்களினின்றும் அறியப் பெறும் பல புதிய செய்திகள். இவற் ருல், தில்லைப் பெருங்கோயிலின் வர லாற்றுச் சிறப்பும் பழமையும் இனிது அறியப்படும்.

**தீர்த்தச் சிறப்பு :**

சிவகங்கை, பரமானந்த கூவம், குய்ய தீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாத தீர்த் தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரித் தீர்த்தம், பிரம தீர்த்தம், சிவப்பிரியைத் தீர்த்தம், திருப்பாற்கடல் தீர்த்தம் ஆகி யவை சிறப்பான தீர்த்தங்கள் ஆகும். இவற்றில் மூழ்குவோர் எல்லாப் பேறு களும் பெற்றின்புறுவர் என்று புராணங்

கள் கூறும். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்ற இத் தில்லைவனத்தின் சிறப்பினைச் சான்றோர் புகழ்வர் ;

" தீர்த்தமென்பது சிவகங்கையே
ஏத்தருந்தலம் எழிற்புலியூரே
மூர்த்தியம்பலக் கூத்தனதுருவே "

**வியாக்கிரபாதர் – பதஞ்சலியார் :**

மத்தியந்தனன் என்னும் முனிவனுடைய திருமகனாய்த் தோன்றித் தில்லைத் திருமூலட்டானத்திலே சிவபிரானைப் போற்றி வந்த ஒரு முனிவர், வழிபாட்டிற்குப் பூக்கள் கொய்வதில் நியமம் வேண்டி, 'அடியேனுடைய கையும் காலும் புலியைப்போல வலுவான நகப்பற்று உண்டாகவும், அவற்றில் கண்கள் பொருந்தவும் அருள்புரிந்

திடுக' என்று இரந்தார். அவ்வாறே அளிக்கப் பெற்ற அம் முனிவரே 'வியாக்கிர பாதர்' எனப்பட்டார். ஆதிசேடனே தில்லைக்குப் 'பதஞ்சலி என்ற பெயருடன் போந்து வழிபட்டின் புற்றனன். இவ்விருவர்க்கும் இறைவன் திருநடனம் காட்டி அருளினன் என்பது வரலாறு. இதன் விரிவைக் கோயிற் புராணத்து வியாக்கிரபாதச் சருக்கத்தும், பதஞ்சலிச் சருக்கத்தும் காணலாம்.

**பிற வரலாறுகள் :**

மணிவாசகப் பெருமான் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேசுவித்தது இத் தில்லைவனத்திலேயே நிகழ்ந்தது.

சிவபாதசேகரன் காலத்தே, திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகளைக் கண்டது இங்கேயே. பொன்னம்பலத்திற்கு மேற்பால் இருந்த திருமுறைச் சுவடிகளை நம்பிகள் கண்டார். சோழப் பெருமன்னன் நம்பிகளைக் கொண்டு திருமுறைகளைத் தொகுத்து முறைப்படுத்தித் திருமுறை கண்ட சோழன் என்ற சிறப்புப் பெற்ருன்.

சேக்கிழார், இறைவன் அடியெடுத்துக் கொடுக்க 'உலகெலாம்' எனத் தொடங்கித் திருத்தொண்டர் புராணத்தைப் பாடி ஆயிரக்கால் மண்டபத்தில், அநபாயன் ஆகிய சிவபாத சேகரன் பாராட்ட அரங்கேற்றினுர். திருஞான சம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச்

சிவகணங்களாய்க் கண்டு வழிபட்டது இத் தலத்தேயே. சுந்தரர் இங்கு இறைவன் அருளாடலைக் கண்டு வழிபட்டின்புற்ருர். அவ்வருளாளர் வழிபட்ட நிலையின் சிறப்பைச் சேக்கிழார் கூறுவது உளங்கொளத் தக்கது:- 'ஐந்து பேரறிவும் கண்களே கொண்டன; அளப்பரிய கரணங்கள் நான்கும் சிந்தையில் வந்து ஒடுங்கின; குணங்கள் மூன்றும் சாத்துவிகத்திலே வந்து சார்ந்தன. இந்நிலையில் ஆனந்தக் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்தார்; மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்து நின்ருர் என்பது அவ்விளக்கம். அப்பரடிகளை 'என்று வந்தாய்' என்ற திருக்குறிப்புடன் ஆடல்வல்லான் அழைத்து அருளினன் என்பது அப் பெருந்தகையாரின் பாடலால் விளங்குகின்றது.

## அடியார்க்கெளியவன்-சிற்றம்பலவன்:

சந்தானசாரியர்களில் உமாபதி சிவாசாரியார்க்கு நடராசப்பெருமான் சீட்டுக் கொடுத்தருளினன் ;

" அடியார்க் கெளியன்சிற்
றம்பலவன் கொற்றங்
குடியார்க்கு எழுதும்கைச்
சீட்டு—படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப்
பேதமறத் தீக்கைசெய்து
முத்திகொடுத்தல்
முறை.''

இவ்வாறு அடியார்க்கெளியவனாகிய ஆனந்தக்கூத்தன் சீட்டு அருளியவாறே, உமாபதிசிவனார் பெற்றான் சாம்பான் என்ற அடியவர்க்குத் தீக்கை புரிந்து வீடு பேறு உதவினர் என்பது வரலாறு.

இவ்விடத்து, மதுரைப் பெருமான் பாணபத்திரனுக்காகச் சேரமானுக்கு விடுத்த திருமுகப்பாசுரம் ஒப்பிட்டு மகிழத்தக்கது. 'அதில் மதிமலி புரிசை மாடக்கூடற் பதியிசை நிலவும் பானிற வரிச்சிறகு அன்னம் பயில் பொழில் ஆலவாயில் மன்னிய சிவன்யான்' எனவருந்தொடர்கள் உற்று நோக்கத் தக்கவை. இவ்விரண்டு தெய்வ வாக்கு களின் நுட்பங்களும் திட்பங்களும் ஆழ்ந்து நோக்கி இன்புறத்தக்கவை. அடியவர் பொருட்டுப் பரங்கருணைத் தடங்கடலாக உள்ள சிவபிரான் எத்தகு விளையாடல்களை மேற்கொள் கின்றான் என்ற மெய்ம்மை கூர்ந்து நோக்கத்தக்கது. 'அடியார்க்கு எளி யன் சிற்றம்பலவன்' என்று பரம் பொருளே கூறலுறின், அடியார்தம்

பெருமை அளவிட்டுரைத்தலும் கூடுமோ?

## குருஞானசம்பந்தர் தரிசனம் :

தருமையாதீனத்தை நிறுவிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் தில்லைவனம் போந்து நடராசப் பெருமானையும், சிவகாமி அம்மையையும் வழிபட்டு ஆயிரக்கால் மண்டபத்தில் தியான நிலையில் இருந்தார்கள். அப்போது இரவில், தன் அருட்குழந்தைக்கு அயரா அன்புடன் சிவகாமியம்மை பாற்சோறும் பால் பாயசமும் கொண்டுவந்து உண்பித்த பெருங்கருணைச் செயலை உள்ளுந் தோறும் உள்ளம் சிலிர்க்கும். பரம் பொருளின் பெருங்கருணைக்கு இலக்காகிய அவ்வருட் சான்றோரின் பெருந் தகவு வார்த்தைகளால் விரிக்கவும்

கூடுமோ? திருஞானசம்பந்தர் ஞானப் பால் உண்டார்; குருஞானசம்பந்தர் ஞானப்பால் பாயசமும் உண்டார். அதனாலேயே, அச் சிவஞானப் பெரும் பேறு 'சிவபோகசாரம்' என்னுஞ் செந்தமிழ்ச் சாத்திரக் கருவூலமாய் வெளிப்படலாயிற்று.

தில்லையிலே ஆடும் பெருமானைச் சிவபோகசாரத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தோத்திரிக்கும் பாடல்களாக இரண்டு உள்ளன. அவற்றுள் முன்னது, பெருமான் தமக்குச் செய்தருளிய பேரருளை வியந்து பாடுவது. அப்பேரருளை வியந்து போற்றிப் பாடுவது பின்னது:-

" ஆர்க்குந் தெரியாத
ஆனந்த இன்ப வெள்ளம்
மேற்கொண்டு கொண்டு
விடுகுதில்லை — யார்க்கும்

தெரியாப் பரப்பிரமஞ்
சேர்த்தாய் உனக்குச்
சரியார் சிதம்பர நாதா"

"எங்கே நடத்துமோ
எங்கே கிடத்துமோ
எங்கே இருத்துமோ
என்றறியேன் — கங்கைநதி
சூடினன் தில்லையிலே
தொந்தொ மென நின்றுநடம்
ஆடினன் எங்கோன்
அருள்"

### "உலகெலம்" விளங்கும் ஒட்பம் :

இறைவன் அருளிய 'உலகெலாம்' என்ற மெய்ம்மொழியைப் பதினன்கு இடங்களில் வைத்துப் பாடியருளிய சேக்கிழார் செந்தமிழ் இத்தில்லையி

லேயே மலர்ந்தது என்பது குறிப்பிடத் தக்கது. திருத்தொண்டர்கள் பெருமை அனைத்தும் பக்திச்சுவை தோன்றப் பாடியருளிய அப்பெருந்தகையார் திரு வீர்க்குக் கமழ்ந்த ஆயிரக்கால் மண்ட பமே 'இராஜசபை' என்ற திருப்பெய ருடன் இன்றும் ஆடல்வல்ல பெருமான் திருவோலக்கமண்டபமாகத் திகழ்கின் றது. முதல், இடை, கடை யிடங்களில் திருத்தொண்டர் புராணத்தில் இறை வன் நிறைமொழி பயிலும் திருப்பாடல் கள் இவை :

"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்கு வாம்."

"சோதிமுத்தின் சிவிகை சூழ்வந்து பார்
மீதுதாழ்ந்துவெண் ணீற் ெருளி
போற்றிநின்று
ஆதியாரருளாதலின் அஞ்செழுத்து
ஓதியேறினர் உய்ய உலகெலாம்."

"என்று மின்பம் பெருகு மியல்பினல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்."

## தில்லைவாழந்தணர்கள் :

சுந்தரர் திருத்தொண்டர் பெருமையைப் பாட முற்பட்டபோது சிவபிரான் அடியெடுத்துக் கொடுத்தான். 'தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று, தில்லையிலே வாழ்ந்து நடராசப்பிரானை முப்போதும் தீண்டி வழிபடும் அப்பெருமக்களை இறைவனே

முதற்கண் எடுத்தோதினன் எனில், தில்லைவனத்தின் பெருமையும், அங்குறையும் அந்தணர் பெருமையும் கூறிடவும் இயலுமோ? இவர் தம் புராணம் பாடவந்த சேக்கிழார், முதலிரண்டு பாடல்களில் ஆனந்தக் கூத்தன் அடிமலர்களையே போற்றினார்:- 'ஆதி, நடு, அளவிலா அளவு, சோதி, உணர்வு, தோன்றும் பொருள், ஏகம், பெண் ஆண் ஆகிய அனைத்துமாய் நிற்கும் தில்லைப் பொதுநடம்' என்று போற்றினார். அடுத்துச் சிற்றம்பலத்துள் நின்று பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல்களை' வாழ்த்தினார். அடிநிழலில் தவம் செய்வோர், அகம்படித் தொண்டு செய்வோர், திருநடம் புரிவார்க்கு ஆள் ஆகும் திருவினால் சிறந்த நீரார், உறுவது நீற்றின் செல்வம் எனக்கொள்ளும்

உள்ளம் மிக்கார், மனமும் அறமும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார், தம்மையே தமக்கொப்பான நிலைமை யால் தலைமை சார்ந்தார் என்றெல்லாம் இத் திருவுடை யந்தணர் பெருமக்களைச் சேக்கிழார் பாராட்டியுள்ளார். இறுதி யாக இறைவனால் சுந்தரர்க்கு முதற் கண் எடுத்தோதப்பெற்ற அருமையைக் கூறி முடித்தார். அவ்வழகிய திருப் பாடல் பின்வருமாறு :-

"இன்றிவர் பெருமை யெம்மால்
இயம்பலாம் எல்லைத் தாமோ?
தென்றமிழ்ப் பயனா யுள்ள
திருத்தொண்டத் தொகைமுன் பாட
அன்றுவன் றொண்டர் தம்மை
அருளிய ஆரூர் அண்ணல்
முன்திருவாக்கால் கோத்த
முதற்பொருள் ஆனார் என்றால்"

இதனுள் திருத்தொண்டத் தொகை யைத் 'தென் தமிழ்ப்பயன்' எனக்கூறிய அருமை உணரத்தக்கது. இவர்களுள் ஒருவரே உமாபதி சிவாசாரியார் ஆகிய சந்தானாசாரியர் என்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

## தில்லைவனமும் தருமையாதீனமும் :

தில்லைவனத்திற்கும் திருத்தருமைக் கும் உள்ள தொடர்புமிகப் பழமையா னது; ஸ்ரீ குருஞானசம்பந்தர் நடராசப் பெருமானிடம் பேரன்பு கொண்டவர். சிவகாமியம்மையினால் ஞானப்பாயசம் பெற்ற திறம் உடையவர் என்பது முன் னும் கூறப்பட்டது. தில்லை பொன்னம் பலம்; மதுரை வெள்ளியம்பலம். மதுரை யில் கால்மாறியாடிப் பாண்டியனை இன்

புறுத்தினுன் அம்பலக் கூத்தன். 'தரு மையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும், திருநகராக அரசுவீற்றிருக்கும், மாசிலா மணித் தேசிகராய' என்று பண்டார மும்மணிக் கோவையில் குமரகுருபர அடிகளும் பாடினர். விரிதமிழ்க் கூடலி லும், தில்லைவனத்திலும் ஆனந்தக் கூத் தனே அருள் நடம் புரிகின்றுறுதலின் தில்லையும் திருமதுரையும் ஒன்றெனவே மதித்துப் போற்றத்தக்க உயர் பெருந் தலங்கள்.

தருமையாதீன நான்காவது குருமூர்த் திகளாகவிளங்கிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடத்தே குமரகுருபரர் வந்த போது குருமூர்த்திகள் சீடர்களுக்குப் பெரியபுராணம் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்தனர். " ஐந்து பேரறிவும்

கண்களே கொள்ள" என்ற பெரிய புராணத் திருப்பாட்டிற்குப் பொருள் விளக்கம் கூறும் நேரம். அப்பாடலின் அநுபவப் பொருள் யாதென்று, புதியவராகப்போந்த குமரகுருபரரைக் கேட்டனர் குருமூர்த்திகள். சுந்தரர் தில்லைக் கூத்தனை வழிபட்ட ஆனந்த நிலையைக் கூறுவதன்றோ இவ்வற்புதத் திருப்பாட்டு. குமரகுருபரர் வாக்குத் தடைபட்டது. திருவருள் உணர்ந்தனர். ஞானதேசிகர் நற்றாள் தொழுது தம்மைச் சீடராக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினர். குருநாதர் காசியாத்திரை சென்று வருமாறு பணித்தார்கள். காசி சென்று வரும் வரை எவ்வாறு ஆற்றுவேன் என்றார் குமரகுருபரர். குருமூர்த்திகள் சிதம்பர தரிசனம் செய்து வருக என்று ஆணை பிறப்பித்தார்கள்.

அவ்வாறே சிதம்பர தரிசனம் செய்து சிலநாள் தங்கிப் பிரபந்தங்கள் பாடிப் பரவி மீண்டு வந்து சேடராயினர்; குருநாதர்மேல் பண்டார மும்மணிக் கோவை என்னும் பாமாலை புனைந்து வணங்கினர். வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தருமையாதீன அடியவர். குமரகுருபர சுவாமிகளுடன் கல்வி பயின்றவர். வடசொற் கலையும், தென்சொற் கடலும் நிலைகண்ட பெரியார். ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த சாத்திரப்பெருநூலாகிய முத்தி நிச்சயத்திற்கு உரையும், ஞானவரண விளக்கமும் தந்தருளியவர். இப்பெருந் தகை நெடுங்காலம் தில்லைவனத்திலேயே வாழ்ந்து, தமிழ்ப் பணியும், சமயப் பணியும் தழைக்கச் செய்து இறையடி நீழல் அடைந்தார். இவ்வருளாளரின் சமாதி,

கனகசபை நகரில், ஞானப்பிரகாசர் திருக்குளத் தென்மேற்குக் கரையில் உள்ளது. பெரும் புலவராக விளங்கிய இத் தருமையாதீன முனிபுங்கவரைத் தமிழ் உலகும் சமய உலகும் என்றும் மறத்தல் இயலாது.

தருமையாதீனத்தின் அடியவராக விளங்கியவரே படிக்காசுத் தம்பிரான். சிறந்த புலவர். ஞான நோக்குடைய அருளாளர். தில்லைப் பிரானிடத்தில் பேரன்பு பூண்டவர்.

இவரது அருளாற்றலை விளக்க இறைவன் நிகழ்த்திய ஒரு விளையாட்டுப் போதும். ஓர்நாள் தில்லையிலே நடராசப்பிரான் திருமுன்பிருந்த திரைச் சீலையில் தீப்பற்றியதை அருணோக்கால் உணர்ந்த இவ்வடியவர் தருமைத் திரு

மடத்திலே தம் கைகளைப் பிசைந்து அவித்தார். அங்கும் அணைந்தது தீ, தீட்சிதர் ஒருவர் கனவில் தோன்றி 'நம் திரைச்சீலையிற் பற்றிய தீயைப் படிக் காசன் அவித்தான்' என்று அறி வுறுத்தி, திருநீற்றுக் கிழி ஒன்று அருளி, சென்று கொடுக்க என அருளி னன். தருமைவந்து அவ்வந்தணரும் கிழியைச் சேர்ப்பித்தார் என்பது வர லாறு.

தருமையாதீனத்தில் பத்தாவது குரு மூர்த்திகளாக வீற்றிருந்த ஸ்ரீசிவஞான தேசிகர் 'சிதம்பரநாதர் பதிகம்' பாடி வழிபட்டார்கள். இத்திருவருட்பா சாத்திர நூலாகவும் விளங்குகின்றது. தில்லைப்பிரான் திருவடிகளில், அன்பு மணம் கமழ இவ்வருளாளர் சார்த்திய

இச்சொல்மாலை சிதம்பர நடேசர் திரு வருட்பா என்ற பெயருடன் திகழ்கின் றது. ஐந்தொழில் புரியும் அற்புத நடனத்தை ஊனுருகப்பாடும் இவ்வருட் பாக்கள் பின் வருவன :-

" ஒருகணக்கு இல்லாத ஆன்மவர்க்
  ஒருகைத் தலத் தமருகம் [கங்களுக்கு
உடல்கரண புவனபோ கங்களை
  ஓரபய கரதலம் பின் [உதிப்பிக்கும்
பெருகத் திதிக்கும்ஒரு செங்கைத்
  [தலத்து அங்கி
  பேர்பெறச் சங்கரிக்கும் ;
பேதமற ஊன்றும்ஒரு பாதபங் கயம் ;
  பேசத் திரோபவிக்கும் [அகம்
அருளென்று தூக்கியா டிய பாதம்
  களையும்அற வேர்பிடுங்கி [மும்மலங்

அகண்டபரி பூரண சிதானந்த வாரி
அளிக்கும்உன் னருளற்புதத் [யை
திருநடன மகிமைதனை ஆர்உள்ளபடி
தெரிசித்திருக்க வல்லார்? [கண்டு
செகம்பணி திகம்பர சிதம்பர நடேச
சிற்சொரூபானந்தனே" [னே

விரித்தசெஞ்சடை ஆட
வதனசந்திரன் ஆட
விரிகமல நயனம் ஆட
வெண்முறுவல்நிலவு ஆட
நண்ணு தமருகம் ஆட
வீசும்ஒரு செங்கைஆடத்
தரித்தபுலி அதள்ஆட
அபயகரம் ஆடஇரு
தங்குதோடு ஊசல் ஆட

தாங்குநூல் ஆட
மேலோங்குநீர் ஆட ஒளிர்
தண்பவள மேனி ஆட
உரித்தகரியுரி ஆட உரக
கங்கணம் ஆட
உபயபரிபுரமும் ஆட
ஒருபதம் எடுத்து ஆட
ஒருபதம் மிதித்து ஆட
உள்ளேமகிழ்ந்துசற்றே
சிரித்துமலைமங்கை கொண்டாட
நின்றாடும் உன்
திருநடனம் என்று காண்பேன் ?
செகம்பணிதிகம்பர
சிதம்பர நடேசனே
சிற்சொருபானந்தனே.

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

திருச்சிற்றம்பலம்

ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

— பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்